www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 10

# அலகுத் தேர்வு - 1, ஜூலை - 2023

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி – I

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 6X1=6
கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப் பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   (அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் (ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   (இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
2. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
   (அ) உருவகம், எதுகை (ஆ) மோனை, எதுகை (இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
3. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.
   (அ) கொண்டல் – 1. மேற்கு
   (ஆ) கோடை – 2. தெற்கு
   (இ) வாடை – 3. கிழக்கு
   (ஈ) தென்றல் – 4. வடக்கு
   அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 (இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2
4. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
   (அ) குலை வகை (ஆ) மணி வகை (இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

"உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!"

5. பண்புத் தொகையைத் தேர்ந்தெடுக்க.
   (அ) செந்தாமரை (ஆ) வீசுதென்றல் (இ) உணர்வெழுப்ப (ஈ) சிறகார்ந்த
6. தும்பி என்னும் சொல்லுக்கான பொருளைத் தேர்க.
   அ) கனல் ஆ) உந்தி இ) யாண்டும் ஈ) வண்டு

பகுதி – II

பிரிவு – 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3x2=6
11–வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

7. தமிழ்நாட்டுச் சிறுகூலங்களிலிருந்து செய்யப்படும் உணவுப் பொருள்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.
8. "வசன கவிதை" – குறிப்பு எழுதுக.
9. விடைகளுக்கேற்ற வினாக்கள் எழுதுக.
   அ) ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.
   ஆ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார்.
10. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
11. 'மாஅல்' – பொருளும் இலக்கணக் குறிப்பும் எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3x2=6

12. தேன், நூல், பை, மலர், வா – இத்தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழியாக்குக.
13. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
    வடுக்காண் வற்றாகும் கீழ்" – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.
14. கலைச்சொல் தருக.
    Homograph, Vowel



Shot on Y15
Vivo AI camera

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.
சொற்களை இணைத்துப் புதிய இரு சொற்களை உருவாக்குக. (தேன், மணி, மழை, மேகலை)

15. சொற்களில் அமைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.
அ) இன்சொல் ஆ) கரியரும்பு

16. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

பகுதி – III

பிரிவு – 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3X3=9

17. கடலையும் தமிழையும் ஒப்பிட்ட தமிழழகனார் எவ்வாறு இரட்டுற மொழிகிறார்?

18. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை அழகுற விவரிக்க.

19. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

20. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது இவை அனைத்தையும் யாம் அறிவோம். அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் அடிக்கோடிட்டுள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

21. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். கோதுமையை எடுத்துக்கொள்ளின் அதில் சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை முதலிய சிலவகைகளேயுண்டு. ஆனால் தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன்சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. இவற்றோடு வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை.

வினாக்கள்:

1. தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறுகூலங்கள் சிலவற்றை எழுதுக.
2. சம்பா நெல்வகை தமிழ்நாட்டில் எத்தனை உள்ளன?
3. தமிழ்நாட்டின் பொருள் வளத்தினை எதனைக் கொண்டு அறியலாம்?

பிரிவு – 2

அடிபிறழாமல் எழுதுக. 1X3=3

22. "தென்னன் மகளே" எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப் பாடல்.

(அல்லது)

"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு.

பகுதி – IV

எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க. 2X4=8

23. "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில், முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

24. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



25. இன்சொல் வழி நடப்பதால் உண்டாகும் நன்மைகள் எவையேனும் ஐந்தினையும் தீயசொல் பேசுவதால் ஏற்படும் விளைவுகள் ஐந்தினையும் பட்டியலிடுக.

பகுதி – V

விரிவாக விடையளிக்க. 2X6=12

26. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்வளத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

27. "புயலிலே ஒரு தோணி" கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன என்பதைக் கதைவழி கதைப்படுத்தி விவரிக்க.

Shot on Y15
Vivo AI camera

Kindly send me your study materials to padasalai.net@gmail.com